நூலகம் — யாழ்பல்கலைக்கழகம்

Registered as Newspaper at the G. P. O. Under No. G. B. 8935 78

# மனிதன்

விலை சதம் 50

மனிதன்
அஞ்சல் பெட்டி
என் 81
யாழ்ப்பாணம்

ஆத்மா 2 | இராகம் 9 | மார்ச் 1979 | பக்கங்கள் 12

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED
1979-03-22
PERIODICALS DIVISION
★ LIBRARY ★

# தமிழ் ஈழத்தில் அதிகரித்துவரும் அடக்குமுறை:

உலகில் வாழ்கின்ற ஆறறிவு படைத்த பகுத்தறிவு உயிரினங்களின் பல்வேறு வகுப்புகளான தனிமனிதனே கூட்டமோ, குழுக்களோ, நாடோ, இனமோ தனித்தோ பலவாகவோ ஆளுமை, அதிகாரம், பணம், நிலம் சொத்து, படைக்கலங்கள், நிர்வாக இயந்திரங்கள், அபிவிருத்தி இயற்கையின் பாரபட்சங்கள், கோழைத்தனம்' துணிவின்மை, சுயநலம், ஒற்றுமையின்மை முதலியனவற்றை தமக்குச் சாதகமாக்கி தமமை ஒத்த அல்லது தமக்குக் கீழ்ப்பட்ட உலகின் மேற்குறிப்பிட்ட மனித உயிரின் கூறுகளிடையே சிந்தனை ரீதயிலும் செயல் ரீதியிலும் எதிர்மாறுன தாக்கத்தை, விளைவை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் அடக்கு முறைகள் எனலாம். சிந்தனைரீதியிலும் செயல்ரீதியிலும் எதிர்மாறுன தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள், உடல், உயிர், ஊறுகள், பொருளியல் இழப்புக்கள் போன்றவற்றை ஏற்படுத்துகின்றன. உலகின் பல்வேறுநாடுகளிலும், சமுதாயங்களிலும் அடக்கு முறைகள் பலவடிவங்களில் உள்ளன. இங்கும் தமிழீழ மக்களிடையே பல தோற்றப்பாடுகளில் அடக்கு முறைகள் நிலவுவதற்குக் காரணம் சமூக, பொருளாதார அரசியல் நிலைமைகள் ஆகும். சுருங்கக் கூறின் தமிழ் ஈழத்தை அரசியல், சமூக, பொருளாதார, கலை, கலாச்சார நிலைகளில் வ்டுதலையடையச் செய்வதன் மூலமே தமிழ் ஈழத்தின் உள்ளே (தமிழ்மக்களுகள்ளே) உள்ள அடக்கு முறையைத் தீர்க்க முடியும். இலங்கைத்தீவு எங்கனும் தமிழ் மக்கள் அடக்கு முறைக்கு உள்ளாகி வந்தாலும் நாம் இங்கு தமிழ் ஈழத்தில் வெளி நிலையில் அதிகரித்து வரும். அடக்கு முறையைப் பற்றியும் அதன் தோற்றுவாயைப்பற்றியும் சிறிது ஆராய்வோம். (அடக்கு முறைகள் அதிகரிக்க அதன் எதிர் விளைவுகள் அடக்கு முறையை அழித்து விடும் (உ-ம் தமிழ் ஈழத்தில் அபாய்ச்சல் நடவடிக்கைகள், மாரீசன் கூடல் 78 ஆனி 13 துப்பாக்கி சூடு)

உலகிலுள்ள வளர்முக நாடுகள் வரிசையில் தென் ஆசியாவிலுள்ள தமிழ் ஈழம் சிறீலங்கா என்ற இரு நாடுகளை உள்ளடக்கிய இலங்கைத்தீவும் ஒன்ருகும் இவ் இலங்கைத்தீவிலுள்ள 3/2 பங்கைக் கடல் எல்லையாகவும் 3/1 தரை எல்லையாகவும் கொண்ட தமிழ்ஈழமும் தமிழ்ஈழத்தின் எல்லையாக விளங்குகின்ற அயல்நாடான சிறிலங்காவும் கி. முன்னும் கி. பின் 15ம்- நூற்ருண்டு வரையும் சுதந்திரமுள்ள தத்தமது இறைமையை பாதுகாத்துக் கொண்ட இரு நாடுகளாக இவ்விலங்கைத்தீவில் விளங்கி வந்தன அவ்வாறே இந்நாடுகளில் உள்ள மக்களும் தத் தமது கலாச்சாரங்களை, பாரம்பரியங்களைத் தனித்துவத்தைப் பேணிப்பாதுகாத்துச் சுதந்திர புருசர்களாக விளங்கி வந்தனர். 16ம்- நூற்ருண்டின் முற்பகுதியிலிருந்து தமிழ் ஈழமும் சிறீலங்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளால் முறையே போத்துக்கல், ஒல்லாந்து, இங்கிலாந்து என்பவற்ருல் கைப்பற்றப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டன ஆனலும் தமிழ் ஈழத்திலுள்ள பண்டார வன்னியன் என்ற குறு நில மன்னனின் அரசு 1803ம்- ஆண்டு வரையும்

[தொடர்ச்சி 10-ம் பக்கம்]

★ தமிழ் ஈழ சமூக பொருளாதார சிந்தனை இதழ் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சேவைக்கு கைகொடுத்துதவுவீர்!

தமிழ் ஈழத்தின் அபிவிருத்தியடைந்து வரும் மாவட்டங்களான மட்டக்களப்பு, திருமலை அம்பாறை. மன்னார் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில், விஞ்ஞான ஆசிரியர் பற்றுக்குறை, ஆய்வுகூட வசதியின்மை தாய் மொழியில் போதிய நூல்களின்மை முதலியவற்றால் நல்ல சித்தி எய்த முடியாதும் பல்கலைக்கழகம் புகமுடியாதும் இடருறும் உயர்தர விஞ்ஞான மாணவ, மாணவிகளின் நன்மை கருதி கல்விச்சேவையினை நாம் 1978 ஜனவரியில் ஆரம்பித்தோம்.

யாழ் வளாகத்தில் இறுதியாண்டுப் பரீட்சை எடுத்திருந்த சில மாணவர்கள் ஆரம்பத்தில் கிழமைக்கடைசி நாட்களில் நேரடியாக மாணவர்களுக்குப் படிப்பித்து வந்தார்கள். 1978 ஜனவரி மாதம் 27ம் திகதி தொடக்கம் வவுனியாவில் நடைபெற்று வந்த க பொ. த(உயர்தர) விஞ்ஞான மாணவர்க்கான கல்விச் சேவையில் குடியிருப்பு, கோவிற்புதுக்குளம், குச்சன்குளம், நொச்சிமோட்டை, பண்டாரிகுளம், வேப்பங்குளம், முதலிய கிராமங்களிலிருந்தும் வவுனியா நகரிலிருந்தும் மாணவர்கள் நேரடியாகக் கல்விப் பயன் அடைந்து வந்தார்கள், பொது விடுமுறை தினங்களிலும் தொடரப்பட்டு வந்த இக்கல்விச் சேவைக்கு பேராதனை வளாகத்திலிருந்தும் சில பட்டதாரி மாணவர்கள் நேரடியாக வந்து உதவி செய்தனர்.

வவுனியாவில் கல்விச்சேவையின் பொருட்டு யாழ் வளாகப் பட்டதாரி மாணவர்களினதும் உதவி பெற்ற உயர்தர மாணவர்கள் ஒரு சிலரினதும் கூட்டுமுயற்சியால் ரூபா 1000/= செலவில் ஒரு கொட்டில் போடப்பட்டது. ஆசிரியர்களிற்கான போக்குவரத்துச் செலவு, உணவுச் செலவு முதலியவற்றை ஏறக்குறைய 5 மாதங்கள் 'மனிதனே' சமாளித்து வந்தான். மாணவர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒரு பாடத்திற்கு 5/= வீதம் கட்டும்படி கேரப்பட்டார்கள். ஆனால் மாணவர்களின் பணப்பங்களிப்பு திருப்திகரமானதாக இருக்கவில்லை. இதனால் காசு பிரச்சினை தலைதூக்கியது ஏனைய மாவட்டங்களிற்கும் சென்று கல்வித்தானம் செய்ய வேண்டும் எம் தாகம் காசுப்பிரச்சினையால் வேறொரு வடிவத்தைப் பெற்றது. இதுவே அஞ்சல் வழிக் கல்விச்சேவையின் ஆரம்பமாகும்.

விஞ்ஞான பாடங்களான இரசாயனம், பௌதீகம் தாவரவியல், விலங்கியல், தூயகணிதம், பிரயோககணிதம், முதலியவை பத்துத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, 1979 சித்திரைப் பரீட்சைக்கு முன் இவைகளை அச்சிட்டு மாணவர்களுக்கு அஞ்சல் செய்வதென 'மனிதன் தீர்மானித்தான். இப்பாடங்களுக்குத் தேவையான மூலப் பிரதிகளை முழுமையாக எழுதித் தர யாழ் வளாகப் பட்டதாரி மாணவிகளும் மாணவர்களும் முன்வந்தார்கள் அஞ்சல் வழிக் கல்விச் சேவையில் பெரும் செலவினை எதிர் நோக்குவோம் என அஞ்சிய போதும் நல்மனம் படைத்த பொது மக்களும் உதவி பெறும் மாணவர்களும் எமக்கு உதவப்பின் நிற்க மாட்டார்கள். என்ற நம்பிக்கையில் இச்சேவையினை 1978 நவம்பரில் தொடங்கினோம். அச்சு— அஞ்சற் செலவுகளில் 40% தனையே மாணவர்களிடமிருந்து பெறுவதென்றும் ஏனைய செலவை பொது மக்களிடம் இரந்து பெறுவதென்றும் முடிவெடுத்தோம்.

மாணவர்கள் அனுப்பிய பணத்தினால் முதல் மூன்று தொகுதிகளையும் ரோணியோ செய்து மாணவர்களிற்கு மாதத்திற்கு ஒரு தொகுதியாக அனுப்பினோம் நாலாவது தொகுதி பலத்த சிரமத்தின் மத்தியில் பலரின் தியாகத்தினால் அஞ்சல் செய்யப்படுகின்றது. ஏனைய தொகுதிகளைச் சித்திரைக்கு முன் அனுப்புவதினால் நூற்றுக்கணக்கான எமது தமிழீழ சகோதர சகோதரிகள் பயன் பெறுவர். இதற்கு பொது மக்களாகிய உங்கள் தாராள உதவி அவசியம்.

ஆரைப்பற்றை, காத்தான்குடி வந்தாறுமூலை, கல்முனை பெரியபோரதீவு, களுவாஞ்சிக்குடி, கல்லாறு, மண்டூர் ஆரையம்பதி, அக்கரைப்பற்று, செட்டிபாளையம், குருக்கள்மடம், தம்பிலுவில், எருக்கலம்பிட்டி, மருதமுனை, மட்டக்களப்பு, கின்னியா, நிலாவெளி, கும்புறுபிட்டி, உப்புவெளி, உவர்மலை, அன்புவழிபுரம், சாம்பல்தீவு, திருமலை

நானாட்டான், பேசாலை, எருக்கலம்பிட்டி, விடத்தல்தீவு, நாச்சியாதீவு, உப்புக்குளம், அடம்பன், வங்காலை, மன்னார்.

முள்ளியவளை, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கோவிற்புதுக்குளம், இறம்பைக்குளம், சின்னப்புதுக்குளம், வேப்பங்குளம், கன்னாட்டி, செட்டிகுளம், குருமண்காடு, பாவற்குளம், குடியிருப்பு, நொச்சிமோட்டை, வவுனியா முதலிய தமிழீழ கிராமபட்டின மாணவர்கள் நூற்றுக்கணக்கானோரின் நன்மைக்காக இச்சேவை நடாத்தப்படுகிறது,

மொனறாகலை, அட்டன், மஸ்கெலியா கண்டி, பண்டாரவளை, கொழும்பு முதலிய ஸ்ரீலங்கா நாட்டிலுள்ள கிராம பட்டின தமிழ் மாணவ மாணவியரும் எம் சேவையால் பயன்பெற்று வருகின்றனர். இதைவிட, யாழ்மாவட்டத்துப் பல்வேறு கிராமங்களிலுமிருந்து மட்டுப்படுத்தப்பட்டளவு மாணவர்கள் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்பட்டு இவர்களிடம் அச்சு அஞ்சல் செலவின் 75% அறவிடப்படுகிறது

முதல் நான்கு தொகுதிகளிலும் எமக்கு ஏற்பட்ட செலவினை உங்களிற்குச் சமர்பிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடம் | தொகுதி 1 ஸ்ரென்சில் எண் | தொகுதி 1 தாள்கள் | தொகுதி 2 ஸ்ரென்சில் எண் | தொகுதி 2 தாள்கள் | தொகுதி 3 ஸ்ரென்சில் எண் | தொகுதி 3 தாள்கள் | தொகுதி 4 ஸ்ரென்சில் எண் | தொகுதி 4 தாள்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பௌதிகம் | 34 | 17x400 | 09 | 5x400 | 18 | 9x375 | 8 | 4x200 |
| இரசாயனம் | 09 | 5x400 | 11 | 6x400 | 12 | 6x375 | 16 | 8x200 |
| தாவரவியல் | 24 | 12x250 | 31 | 16x250 | 19 | 10x225 | அச்சிடப் | பட்டது |
| விலங்கியல் | 19 | 10x250 | 17 | 9x250 | 17 | 9x225 | 16 | 8x120 |
| தூய கணிதம் | 21 | 12x150 | 05 | 3x150 | 08 | 4x150 | 14 | 7x100 |
| பிரயோக கணிதம் | 15 | 8x150 | 28 | 14x150 | 25 | 13x150 | 30 | 15x100 |
| | 2.5 பெட்டி | 34 6 றீம் | 2 பெட்டி | 26 4 றீம் | 2 பெட்டி | 25 றீம் | 2 பெட்டி | 2 றீம் |

| செலவு | தொகுதி 1 | | தொகுதி 2 | | தொகுதி 3 | | தொகுதி 4 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தாள் | 34 6x30/- | 1038 00 | 264x30/- | 792 00 | 25x30/- | 750.00 | 12x30 | 360 00 |
| ஸ்ரென்சில் | 2 5x45/- | 113 00 | 2x45/- | 90.00 | 2x45/- | 90 00 | 2x45 | 90 00 |
| மை | 7x30/ | 210.00 | 6x30/- | 180.00 | 6x30/- | 180 00 | 6x30/- | 180.00 |
| முத்திரை | 400x-/30 | 120.00 | 400x-/30 | 120.00 | 300x-/30 | 90.00 | 200x-/30 | 60.00 |
| தட்டச்சு | 122x2/- | 244 00 | 101x2 | 202.00 | 99x2 | 198 00 | 100x2 | 200.00 |
| Staples | 8x3/50 | 28 00 | 5x350 | 17 50 | 6x3.50 | 21.00 | 4x3.50 | 18 00 |
| ரோனியோ | இலவசம் | | இலவசம் | | | அச்சுச் 500 00 | செலவு | 170.00 500 00 |
| | | 1753.00 | | 1401.50 | | 1829 00 | | 1578 00 |

| | | |
|---|---|---|
| முதல் நான்கு தொகுதி செலவு | = | 6561 50 |
| மீதி 6 தொகுதிகட்கும் வேண்டிய பணம் | = | 9.00.00 |
| (6 x 1500) | | 15561 50 |
| மாணவர்கள் தந்தது | | 3654.00 |
| ஈடு செய்ய வேண்டிய தொகை | | 11907.54 |

**தமிழ் ஈழத்தின் ஏழை இல்லங்களில்
ஏற்றுவோம் கல்வி ஒளி**

# ஈடுசெய்ய வேண்டிய தொகை

## ரூ 11907.50 சதம்

ஈடுசெய்ய வேண்டிய இத்தொகைக்கு தங்கள் பங்களிப்பைத் தருவதன் மூலம் நல்மனம் படைத்தவர்கள் இச்சேவை சிறக்க உதவ வேண்டும். உங்கள் உதவியைப் பணமாகவோ அல்லது ஸ்ரென்சில், தாள், மை முதலியன பொருட்களாகவோ உத்தியோக பூர்வ பற்றுச்சீட்டுடன் உங்களை நாடிவரும் கல்விச்சேவைக் குழுவினரிடம் கையளிக்கலாம்.

நேரடியாகப் பணம் அனுப்ப விரும்புவோர் யாழ் அஞ்சல் நிலயத்தில் மாற்றக்கூடிய அஞ்சற் கட்டளையாகவோ, காசுக்கட்டளையாகவோ திரு. அ. விமலதாசன் என்ற பெயரிற்கு

மனிதன் கல்விச் சேவை
அஞ்சல் எண் 81
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தமிழ் ஈழ விடுதலையில் உள்ள நாட்டத்தால் இக்கல்விச் சேவைக்கு ஏற்கெனவே தங்கள் உழைப்பால் உதவி செய்த யாழ் — பல்கலைக்கழக மாணவ — மாணவியருக்கும் ஏனைய நண்பருக்கும் உதவி செய்ய முன்வரும் பொது மக்களிற்கும் எம் நன்றி.

மனிதன் கல்விச்சேவைக்
குழுவினர் சார்பில்
கற்பகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் உலகமயமாக்கல்

தமிழீழப் பிரச்சனை பாராளுமன்ற இயக்கங்களைவிட பயங்கரவாத இயக்கங்களாலும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள தாயகப்பற்று மிகுந்த இளைஞர்கள் சிலராலும் இன்று சர்வ தேசிய மயமாக்கப்பட்டுள்ளது. இதனால் வல்லரசுக்களின் கழுகுக் கண்கள் இலங்கைதீவின் பக்கம் திரும்பி உள்ளன, ஒரு ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக இன்னொரு ஏகாதிபத்தியத்தின் அடிமைத்தனத்துக்குள் ஆட்படுவதை மக்கள் விரும்பமாட்டார்கள். எனவே தமிழீழப் பிரச்சனையை ஏனைய ஆசிய நாடுகளோடும் ஆபிரிக்க இலத்தின் அமெரிக்க நாடுகளோடும் ஒன்று சேர்த்து ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக மாற்றுவதனால் நாமும் ஏனைய அடிமைபட்ட மூன்றும் உலக நாடுகளும் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் பரஸ்பர உதவிகளினாலும், உறவுகளினாலும் விடுதலையடைய முடியும்.

ஆசிய நாடுகள் மத்தியில் தமிழீழபிரச்சனையின் தாற்பரியம் பற்றி கடந்த மூன்று வருடங்களாக மனிதன் பிரச்சாரம் செய்து வந்திருக்கின்றான். 2 வருடங்களுக்கு முன்னதாக பாங்கொக்கில் நடை பெற்ற சர்வதேச மகாநாடொன்றில் இப் பிரச்சாரம் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்டது. சர்வதேச மகாநாடுகளில் தமிழீழத்திற்கு தனி நிலை வழங்கப்படவேண்டுமென மனிதன் நன்கு வலியுறுத்தினான், அம் மகாநாட்டில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான அறிஞர்களுக்கு தமிழ்த் தேசிய இனம் எதிர் நோக்கும் பயங்கர எதிர்காலம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அண்மையில் சிறீலங்கா நாட்டில் நடைபெற்ற சர்வதேச மகாநாடொன்றில் தமிழீழப்பிரச்சனை தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட தாக்கம் பற்றிக் கடந்த இதழில் முன் பக்கச் செய்தியாக வெளியிட்டிருந்தோம். சர்வதேச மாணவர் இயக்கங்களுடனும், இனப்பிரச்சனை தொடர்பான உலக அமைப்புக்களோடும் மனிதன் தொடர்புகொண்டு எமது பிரச்சனையை உலக மயப்படுத்துவதில் அக்கறை காட்டி வருகின்றான். முதன் முறையாக வெளிநாட்டு அறிஞர்கள் எமது பிரச்சனை தொடர்பாக இயற்றிய பாட்டு இவ் இதழில் இடம் பெறுகிறது.

எவ்வளவுக்கு எமது பிரச்சனை உலகமயப்படுத்தப்படவேண்டுமோ அதை விடத்தீவிரமாக தமிழ் மக்கள் அரசியல் விழிப்புணர்சிபெற்று விடுதலைபெறுவதற்குத்தம்மை எல்லா வழிகளிலும் தயார் செய்ய வேண்டும். எவ்வாறு நாங்கள் எங்கள் பிரச்சனை தொடர்பாக ஏனைய நாட்டவர்கள் அறிய வேண்டும். என்று விரும்புகின்றோமோ அதே போன்று நாமும் ஏனைய நாடுகளின் பிரச்சனைகள் பற்றி அறிந்திருத்தல் அவசியம். இதன் அடிப்படையில் கிழக்குத்திமோரின் விடுதலைப்போராட்டம் பற்றிய சில தகவல்களை மனிதன் இம் முறை வழங்குகின்றான்.

# Race Relations Live in - Presentation Song

(We would like to request the participation of everybody. In short people's participation, during our presentation. The members of the group will play the role of Tamils, and the audience—the role of Sinhalese. Participation requested is in singing the lines of the Sinhalese.)

**Listen to Our Voice:**

Narrator: Government and the Sinhalese majority.

Our fellow country men of Sri Lanka listen to our voice!

Listen to us! we are the tamils, the so-called minority. For years we have been oppressed!

We feel, no, we know that we belong to this country.

And yet present situations force us to feel otherwise:

Are you conscious of that?

Try to feel human. Now, we are forced to say to you :

**Song:** (Lines for the Tamils referred to by T. & Sinhalese – S.)

| | |
|---|---|
| T; Employ us on our merits | S: We shall not be moved. |
| T: Equal opportunities | S: ,, ,, |
| T: We are a people struggling for full humanity | S: ,, ,, |
| T! You also learn our language | S: ,, ,, |
| T: Write to us in Tamil | S; ,, ,, |

**Refrain** S: We shall not, we shall not be moved (2)

T: You think you have been fair in what you've done for us

S: We shall not be moved.

| | |
|---|---|
| T; Stop colonization | S: We shall not be moved. |
| T: Start new industries | S: ,, ,, |

Continued on Page 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசையமாட்டோம்

[தமிழ் மக்களின் சமூக, பொருளாதார- அரசியல் பிரச்சினைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக மூன்று நாட்கள் பரந்தனில் தங்கியிருந்த மூன்றும் உலக அறிஞர்களின் வாழ்வனுபவங்கள் இப்பாட்டு வடிவில் தரப்படுகின்றன ஆசிய அறிஞர் பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருந்த இப்பாட்டு அங்கு வாசிக்கமுடியாதபடி தடை செய்யப்பட்டது வாசகர்களுக்குத் தெரிந்ததே. இக் குழுவில் அங்கம் வகித்த குழுவினர் ஐவர் தம்மைத் தமிழர்களாகவும் ஏனைய பேராளர்களை சிங்களவர்களாகவும் கருதிப் பங்கு பற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

**எமது குரலுக்குச் செவிகொடுங்கள்**

**செய்தி வாசிப்பவர்:** அரசாங்கமே! சிங்களப் பெரும்பான்மையினரே! எமது சக சிறீலங்கா நாட்டு மக்களே!

— எங்கள் சத்தத்திற்குச் செவிமடுங்கள்!

— நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்!

— சிறுபான்மையினர் என்று அழைக்கப்படும் தமிழர் நாங்கள்தான்

— பலவருடங்களாக நாங்கள் அடக்கியாளப்பட்டு வருகிறோம்;

— நாங்கள் உணர்கிறோம்— இல்லை எங்களுக்குத் தெரிகிறது - நாங்கள் இந்நாட்டவர் என்று;

— இருந்தும் தற்போதைய நிலைமை எம்மை வேறு விதமாக உணர வைக்கிறது.

— இதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா ?

— மனிதாபிமானத்துடன் சிந்திக்க முற்படுங்கள்.

— இப்பொழுது உங்களுக்குச் சொல்ல நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

**பாட்டு:** [த - தமிழரையும், சி - சிங்களவரையும் குறிக்கிறது]

| | |
|---|---|
| த: தகுதி அடிப்படையில் வேலைக்கு அமர்த்துங்கள் | சி: நாங்கள் அசையமாட்டோம் |
| த: சம உரிமை தாருங்கள் | சி: ,, ,, |
| த: நாங்கள் பூரண மனிதத்துவத்திற்காகப் போராடும் மக்கள். | சி: ,, ,, |
| த: நீங்களும் எமது மொழியைப் பயிலுங்கள், | சி: ,, ,, |
| த: எமக்குத் தமிழில் எழுதுங்கள், | சி: ,, ,, |

**பல்லவி**

சி: நாங்கள் மாட்டோம்!
நாங்கள் அசைந்து கொடுக்க மாட்டோம்!

த: நீங்கள் எங்களிற்கு செய்தவை நியாயமானவை என்று நினைக்கின்றீர்களா?

சி: நாங்கள் அசைந்து கொடுக்க மாட்டோம்!

| | |
|---|---|
| த: சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துங்கள்! | சி: நாங்கள் அசைய மாட்டோம். |
| த: புதிய கைத்தொழிற்சாலைகளைத் தொடக்குங்கள்! | சி: ,, ,, |
| த: நாங்களும் மனிதர்கள் எமது உணவிற்காக உழைக்க வேண்டியவர்கள்! | சி: ,, ,, |
| த: எமக்கு நல்ல வீதிகளும் பாலங்களும் வேண்டும்! | சி: ,, ,, |
| த: பாடசாலை, சுகாதார வசதிகள் வேண்டும்! | சி: ,, ,, |
| த: எங்களுக்கு நல்ல சேவைகளைத் தர வேண்டும்! | சி: ,, ,, |

**வேறு**

| | |
|---|---|
| த: எமது ஆட்களை அதிகாரிகளாக நியமியுங்கள்! | சி: ,, ,, |
| த: எமது பகுதிகளில் எமக்காக உழைக்க! | |
| த: தனிப்பட்ட பிரதேசமொன்றிற்குச் சொந்தமானவர்கள் நாங்கள்! | சி: ,, ,, |

**வேறு** [சிங்களவர்கள் முதலில்]

| | |
|---|---|
| சி: தமிழ் ஒரு தேசிய மொழி | த: காலம் கடந்த அநுசலுகை |
| சி: தரப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளது! | த: ,, ,, |
| சி: உங்கள் கோரிக்கைகள் பலவற்றை தந்துள்ளோம்! | த: அது போதாது! |
| சி: அகதிகளில் அக்கறை எடுத்துள்ளோம் | த: என்ன? எங்கள் சொந்த நாட்டிலா? |
| சி: விகிதாசாரப் படி இப்பொழுது நாங்கள் அதிகம் செய்திருக்கிறோம்! | த: அது போதாது! |

தொடர்ச்சி 11-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குத் தீமோரில்

# மக்கள் விடுதலைப்

இந்தோனேசிய ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறையிலிருக்கும் கிழக்குத் தீமோர் மக்களின் விடுதலை இயக்கம் 'பிரெற்றிலின்' ஆகும். இவ்வியக்கத்தின் ராணுவப் பிரிவு 'பலின்றில்' ஆகும். மீட்கப்பட்ட கிழக்குத் தீமோர் நாட்டுப் பிரதேசங்களில் ஆட்சியை அமைத்துள்ள தீமோர் மக்கள் ஜனநாயகக் குடியரசு அரசாங்கத்தில் தேசிய பாதுகாப்பு மந்திரியாகவும் பலின்றிலின் பிரதம அதிகாரியாகவும் இருந்து இராஜதந்திர நடவடிக்கைகளிற்காக வெளிநாடுகளிற்கு அனுப்பப்பட்ட திரு. ரூஜேறியோ லொபட்டோ ஐரோப்பாவில் அவுஸ்திரேலிய சஞ்சிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியின் தமிழாக்கம் இங்கு தரப்படுகின்றது. இப்பேட்டி கிழக்குத் தீமோர் மக்கள் அவர்களிற்கேயுரித்தான பிரத்தியேக சூழ்நிலைகளில் எவ்வாறு வீரவிடுதலைப் போராட்டம் நடத்துகிறார்கள் என்பதை விபரிக்கிறது.

**கேள்வி:** கிழக்குத் தீமோரில் பிரெற்றிலின் (Fretilin) படைகள் பின்பற்றி வரும் இராணுவ யுத்த தந்திரம் யாது?

**பதில்:** எங்கள் யுத்த தந்திரம் தற்காப்புக்காக மட்டுமே. ஆனால் இந்த யுத்த தந்திரத்தின் ஓரம்சமாக கொரில்லா உதவியுடன் அல்லது பெரிய எண்ணிக்கையக் கொண்ட துருப்புக்களின் உதவியுடன் நாம் சிறிய தாக்குதல்களை மேற்கொள்ளுகிறோம். உதாரணமாக இந்தோநேசியர் பல துருப்புக்களுடன் எம்மை எதிர்நோக்கி வருகின்ற போது நாம் அவர்களை நேரிற்கு நின்று எதிர்த்தலைத் தவிர்க்கிறோம். ஆனால் எப்போதாவது இப்படைகளின் அல்லது தாக்குதல் செய்யப் பதுங்கி இருக்கும் எதிரிகளின் ஒரு பகுதியை அழிக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் போது நாம் தாக்குதலை மேற்கொள்வோம். குறிப்பிட்ட பகுதிகளில் இயங்கிக் கொண்டிருக்கும் துருப்புக்களின் எண்ணிக்கை பற்றிய செய்தியை எமது ஒற்றர் இலாகாவிற்கூடாக பெறுகிறோம். பின்னர் சிறிய எதிரிக்கூட்டங்களை முற்றாக அழிப்பதற்காக அவற்றிற் கெதிராக நாம் இரட்டிய மிகப் பெரிய படைகளை அனுப்புவோம். எமது யுத்த தந்திரத்தின்படி எதிரியைத் தோற்கடிப்பது மட்டுமல்ல, அவர்களை முற்றாக முடிவுகட்டுவதுமாகும். எதிரியைத் தோற்கடித்து ஓடவைத்த பின் இன்னொரு நாளைக்கு மீண்டும் சண்டை பிடிப்பது எமது கொள்கையல்ல. உதாரணமாக எதிரி நூறு துருப்புக்களுடன் எதிர்த்தால் நாம் 500 பேர்களுடன் அவர்களைத் தாக்கி அவர்கள் மீளவும் தாக்குதல் செய்யக்கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களையும் ஒழித்து அவர்களை முற்றாக அழிப்போம். அதே போல எதிரி நூறு அல்லது 200 படை கொண்ட பாதுகாப்பு படைகளை ஒரு கிராமத்திலோ அல்லது வீதியைப் பாதுகாக்கவோ, விட்டுச் செல்வது எமக்கு நன்மை பயக்கின்றது. நாம் அவர்களின் நிலைமையை நன்றாகப் படித்து அவர்களிலும் பல மடங்கு அதிகமான படைகளைத் தயார்படுத்துகிறோம். நாம் குறுகிய நேரத்தில் கூடிய அழிவை ஏற்படுத்தி வெற்றி பெற அநேகமாக இரவுவேளைகளில் திடீர் தாக்குதல்களை நடாத்துகிறோம். அவர்கள் தம்மைத் திரும்பவும் பலப்படுத்து முன் அவர்களை முற்றாக அழித்து அவர்களின் யுத்த ஆயுதங்களையும் மருத்துவப் பொருட்களையும் கைப்பற்றிக் கொள்ளுகிறோம். பொதுவாக எதிரிகளே தாக்கவருவோராவர். நாம் சிறிய தாக்குதல்களை பாதுகாப்பிற்காக எமது யுத்ததந்திரத்தில் [illegible] கொள்ளுகிறோம். யுத்தத்தை நீட்டி வளர்த்தலை இன்னொரு அம்சமாக எமது யுத்த தந்திரம் கொள்வதற்கு எதிரியைப் பற்றிய ஆய்வே காரணமாகும், பொதுவாக எதிரி மிகப் பெரிய பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குவதால் பிறெற்றிலினுக்கு எதிராக ஒரு நீண்ட யுத்தத்தை எதிர்நோக்கமுடியாதிருக்கின்றனர். இயலுமானளவு துருப்புகளை கொல்வது மட்டுமல்ல அவர்களைப் பொருளாதாரரீதியில் தாழ்த்துதலும் எமது நோக்கமாகும். அதனால் நாம் எல்லா வீதிகளையும் தடை செய்து பாலங்களை அழித்து எதிரிகள் விமானங்கள், கெலிகொப்ரர், யுத்தக்கப்பல்கள் மூலம் எம்மை அடைய நிர்ப்பந்திக்கிறோம். இதனால் அவர்களுக்கு மிகப் பெரிய செலவுகள் ஏற்படுகின்றன.

**கேள்வி:** இந்த யுத்த தந்திரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை விளக்கச் சில உதாரணங்கள் தருவீர்களா?

**பதில்:** மனற்றுட்டோவின் தெற்கே (Manatuto) இலக்லுபர்விற்கு செல்லும் (Lakluber) வீதியில் உள்ள கெனக்கில் அமைந்திருக்கும் மலைக்கடவையில் உள்ள வீதியை அழித்து விட்டோம்.

உதாரணமாக டிலி (Dili)யிலிருந்து மனற்றுட்டோவரை பிரதான வடக்குக் கரைவழியாக எதிரிகள் ஒரு பெரிய கூட்டமாகச் செல்ல எத்தனித்தனர். செங்குத்தான கற்பாறையைச் சுற்றிய சுபாஓ (Subao) எனும் வீதியின் மிகக்கடினமான பகுதியை அடையும் வரை அவர்களை அனுமதித்தோம். எமது திட்டப்படி அகழிகளில் இருந்த ஒவ்வொரு போர்வீரர்களிற்கும் வேண்டிய அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டது. நாம் கடைசியிலும் முதலிலும் வந்துகொண்டிருந்த வாகனங்களின் சாரதிகளைச் சுட்டோம். எதிரிகள் முன் செல்லவோ, பின்செல்லவோ முடியாமல் திகைத்தனர். எதிரிகளிடமிருந்து மிகக்குறைந்தளவு தூரத்திலிருந்தே (20 மீற்றர்) எமது துருப்புக்கள் நின்று அதிககூடிய பலத்துடன் அதிர்ச்சியைக் கொடுக்கும் வண்ணம் திடீர்த் தாக்குதல் செய்தோம். பீரங்கிகளை உபயோகிக்க முடியாத காரணத்தால் எதிரிகள் குறைந்த இடைவெளி தூரத்தில் நின்று சண்டை செய்யப் பயப்படுவர். நாங்கள் அந்த நகரும் படைப்பிரிவை முற்றாக அழித்துவிட்டோம். அப்போதிலிருந்து அவ்வீதியைப் பயன்படுத்த எதிரி எத்தனிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம்

**கேள்வி: கிழக்குத் திமோரில் இருக்கும் எதிரிகளின் தாக்குமுறையை எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்!**

பதில்: கிழக்குத் திமோரை பல்வேறு பகுதிகளாப் பிரிக்க ஜகட்டா உயர் இராணுவ அதிகாரிகள் முனைகிறார்கள். பிரதேசத்தை வடக்குத் தெற்காகப் பிரிப்பதன்மூலமும் நாட்டைக் குறுக்கிடும் வீதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாலும் இதனைப் பிரிக்க முயலுகிறார்கள். கிழக்குத் திமோரையும் அங்கு எதிரிகளால் ஊடுருவப்பட்ட பகுதியையும், தேசப்படத்தில் பார்க்கும்போது இதனை அறியலாம். [F]பெலின்ரில் பிரதேசத்தில் சுதந்திரமாக நடமாடுவதை எதிரிகள் தடுக்க விரும்புகிறார்கள் அவர்கள் பிரெற்றிலின் படைகளைச் சிறிய பகுதிக்குள் கட்டுப்படுத்த விரும்புகிறார்கள் இதனைச் செய்வதற்கு 100 அல்லது, 200 துருப்புக்களைக் கொண்ட பாதுகாப்பு படைகள் வீதியோர ஓரமும் சிறிய கிராமங்களிலும் விடப்பட்டிருக்கின்றன. ஆனால, இது பிறெற்றிலினிற்கு நன்மையை அழிக்கின்றது நாம் அவர்களைப் போல் மூன்று அல்லது, நாலு மடங்கு பெரிய படைகளைக் கொண்டு நன்கு தயாரிக்கப்பட்ட திடீர்த் தாக்குதல் மூலம் எதிரிகளின் பாதுகாப்புப் படைகளை ஒவ்வொன்றாக அழிக்க முடியும். இதனால் இந்தோனீசியப் படைகள் கொள்கையளவில் மட்டுமே எம்வீதிகளைக் கட்டுப்படுத்த முடியும் ஆனால், நடைமுறையில் நாம் சுதந்திரமாக முழுப் பிரதேசத்திலும் நடமாட முடியும். அவர்கள் வீதிகளை விட்டு சுற்றியுள்ள மலைகளிற்குச் செல்வதில்லை. எங்கெங்கு டாங்கிகள் போக முடியுமோ அங்கங்கு மட்டுமே அவர்கள் செல்லுகிறார்கள். மலைகளில் ஏறுவது பிறெற்றிலினிற்கு இலகுவானது ஒன்றாகும் இந்தோனீசியரிற்கு கிழக்குத் தீமோரில் சண்டை பிடிப்பது மிகவும் கடினமாகும் ஏனெனில் அவர்களிற்கு பிரெற்றிலீன் எங்குள்ளதென்பது தெரியாது பிரெற்றிலின் எங்கும் உள்ளது அத்துடன் இந்தோனீசியர் அந்நிய நாடொன்றில் சண்டை செய்து வருகிறார்கள், அவர்களிற்கு நிலப்பரப்பெல்லை தெரியாது.

**கேள்வி: எவ்வாறு பிறெற்றிலின் படைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன?**

பதில்: பிறெற்றிலின் படைகள் நாலு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன முதலாவதாக போத்துக்கேயரின் ஏகாதிபத்தியத்தில் தரைப்படையிலிருந்த திமோதியர்களாலும், ஏற்கனவே இராணுவ சேவை செய்து இருப்பில் இருக்கும் திமோரியர்களாலும் ஆக்கப்பட்ட நிரந்தர தரைப்படை. இந்தத் துருப்புகள் நடமாடுவன ஆகவும், நாடு முழுவதிலும் கரையோரப் பகுதியிலிருந்து ரீயூருவாலா எல்லைவரை யுத்தம் செய்ய வேண்டிய கடமையைக் கொண்டனவாகவும் இருக்கின்றன. இரண்டாவதாக, குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் மட்டுமே சேவை செய்வதற்கென அமைக்கப்பட்ட பிரதேச துருப்புக்களாக உள்ளனர். உதாரணமாகப் பனிகனில் இருந்து விக்கியூகியூ வரை தாக்குதல்களிற்குட்படும்போது பிரதேச துருப்புகள் நிரந்தர துருப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன,

மூன்றாவதாக கொரில்லாக்கள் உள்ளனர். பிரதானமாக ஒரு சேனையாக உள்ளனர் இவர்கள் சேவை செய்யுமிடங்கள் சிறியனவாகவும் நாடு முழுவதிலும் பரந்தும் காணப்படுகின்றனர் இவர்கள் தாக்குதலின் போது பிரதேச நிரந்தரத் துருப்புகளுடன் ஒருங்கிணைந்து இயங்குகின்றன. இறுதியாக அநேக மக்கள் சேர்ந்து அமைக்கப்பட்ட தற்பாதுகாப்புப் படையாகும். இவர்கள் எதிரியைக் கொல்வதற்காகப் பிரயோசனமான எதையும் உபயோகிக்கிறார்கள் இவர்கள் பிரதானமாக பாரம்பரிய ஆயுதங்களான அம்புகள், விற்கள் வெடிகுழாய்கள், பொறிகள் முதலியவற்றை உபயோகிக்கிறார்கள்; இவர்களும் மற்ற மூன்று படைகளுடன் சேர்ந்து இயங்குகின்றனர். இதனால்தான் கிழக்குத் திமோரில் நாம் நடாத்தும் யுத்தம் ஒரு மக்களுடைய யுத்தமாகும் எல்லா மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனினும் அவர்களுடையகடமைகள் இராணுவ ரீதியிலும் மற்றைய துறைகளிலும் வெவ்வேறுபடுகின்றன.

**கேள்வி: உணவு உற்பத்தி செய்தல் மற்றைய துறைகளில் அடங்குமா?**

பதில்: ஆம். போராட்டத்தில் இது முக்கியமான துறையாகும். இது மக்களின் கடமை மட்டுமல்ல' தரைப்படையினதுமே. தமக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்யவும் இதன் மூலம் போராட்டத்தைச் சிறப்பாக நடாத்தவும் மக்களும் தரைப்படையினரும் ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்து தமது உணவை உற்பத்தி செய்கிறார்கள்.

கேள்வி: ஒவ்வொரு தரைப்படைப் பிரிவும் தமக்குரிய தோட்டங்களை வைத்திருக்கிறார்கள் எவ்வாறு போர்வீரர் போர் செய்யும் நேரத்தில் தோட்டங்களையும் கண்காணிக்க முடிகிறது?

பதில்: இது மிகவும் எளிதானது. அவர்கள் சில கட்டுப்பாடுகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதன்படி அவர்கள் சண்டையிலிருந்து தற்காலிகமாக விலகி, தம் தோட்டத்தில் வேலைசெய்து கிடைக்கும் உணவை உண்ண சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும் இத்தோட்டங்கள் இந்தோனேசியக் கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசங்களிலிருந்து மிகவும் தூரத்தில் இருக்கின்றன இதனால் எதிரிகள் இவற்றை அணுகுவது கடினமாகும்.

நெல் விளைவிக்கும் நிலப்பரப்பைக் கூட்டியதோடு தற்போது நாம் காடுகளிலிலும் விவசாயம் செய்ய ஆரம்பித்திருக்கிறோம்.

ராணுவப் பிரிவொன்று காடுகளில் ஒன்றோ இரண்டு கிழமைகளிற்கு வேலை செய்ய விடப்படும் போது மரவள்ளிக் கிழங்கு வத்தாழங்கிழங்கு மரேஸ் [சுரக்காய் போன்ற காய்கறி வகை] முதலிய காய்கறிகளைப் பயிரிடுகிறார்கள். ஒரு மாத காலத்தின் பின் அவர்கள் திரும்பும் போது தமக்கு தேவையான போதியளவு உணவு விளைந்திருப்பதைக் காண்கிறார்கள் இது மட்டுமல்லாமல், காடுகளில் பெருமளவில் வேட்டையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக் கூடிய மிருகங்கள் உண்டு. ராணுவ ஆயுதங்களைப் பாவிக்காமல், பாரம்பரிய ஆயுதங்களைக் கொண்டே எமது மக்கள் சிறந்த முறையில் வேட்டையாடுவார்கள்.

நாம் கூடுதலான உணவு பயிரிடுவதில் மட்டுமல்ல சென்ற காலத்திலும் பார்க்கக் கூடிய சத்துள்ள பல்வேறுவகையான உணவுகளை தமது மக்களிற்குக் கொடுத்து அவர்கள் உடல்வளத்தைப் பெருக்கவும் முயத்திக்கின்றோம்;

கேள்வி; எனினும் அவுஸ்திரேலியாவின் பல மக்கள் கிழக்கு திமோர் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்று கருதுகிறார்களே......?

காடுகளில் பாரம்பரிய உணவுகள் உண்டு. உதாரணமாகக் காட்டு அவரை நன்ருக வளர்கிறது. ஆனால் 6 அல்லது 7 தரம் அவித்த பிற்பாடே இதிலுள்ள நஞ்சை அகற்றலாம். போதியளவு அரிசியோ, சோளமோ இல்லாதிருந்த சமயங்களில் மக்கள் இதனை உபயோகித்தார்கள். உணவாகக் கொள்ளக்கூடிய சவ்வரிசி, காட்டு இலைகள் இங்கு காணப்படுகின்றன.

அவுஸ்திரேலிய மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை வைத்துக் கொண்டு அப்படிக் கூறக்கூடும்;

போர்த்துக்கேயரின் காலனித்துவத்தின் கீழ் மக்கள் பிரிக்கப்பட்டிருந்தார்கள். குழுக்களாகிக் கூட்டாக வேலைசெய்வதிலிருந்து அவர்கள் தடுக்கப்பட்டார்கள். என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்;

தற்போது பிரெற்றிலினின் தலைமையின் கீழ் மக்கள் கூட்டுறவு அமைப்புகளை நாடு பூராகவும் ஸ்தாபித்து ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்காக எல்லோரும் கூட்டாக வேலை செய்கிறார்கள்; தற்போது அவர்கள் தனித்தனியே உற்பத்தி செய்வதைவிடக் கூடிய உணவை எல்லோரும் சேர்ந்து உற்பத்தி செய்கிறார்கள். தற்போது எம்மிடம் மலைப்பகுதிகளில் வளரும் அரிசி உட்பட பல்வேறு வகைகளான அரிசி சோளம் உண்டு. என்பதை நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

கேள்வி: பலின்ரில் [Falintil] இற்கும் பிரெற்றிலின் மத்திய குழுவுக்கும் இடையில் உள்ள உறவு என்ன?

பதில்: பிரெற்றிலின் மத்திய குழுவின் நேரடித்தலைமையின் கீழ் உள்ள ஆயுதம் தாங்கிய கிழக்கு திமோர் மக்களே பலின்ரில் (Falintil) எனப்படுவர் பலின்ரினில் மூதிய அதிகாரிகள் பிரெற்றிலின் மத்திய குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். ஆகவே பலின்ரில் ஆயுதம் தாங்கிய மக்கள் பிரிவாக பிரெற்றிலின் தலைமையின் கீழ் அதன் அரசியற் போக்கைப் பின்பற்றி வருகிறது. தரைப்படையில் அரசியல் பிரதான இடத்தை வகிக்கிறது, வகிக்கும் என நான் வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன். பலின்ரில் படைகளெல்லாம் அரசியல் ஆணையாளர்கள் உள்ளார்கள். 30 பேரைக் கொண்ட ராணுவப் பிரிவு ஒவ்வொன்றும் ஒரு அரசியல் ஆணையாளரைக் கொண்டுள்ளது. இவர் சண்டையில் ஈடுபட்டாலும் இவரது முக்கிய வேலை, சரியான ராணுவ அரசியற் பாதையைப் போர் வீரர்கள் பின்பற்றும் வண்ணம் அவர்களிற்கு தலைமை வகித்தலாகும்; போர்வீரரிற்கு ஒவ்வொரு ராணுவப் பிரிவிலும் கொள்கை ரீதியான கல்விபுகட்டப்படும் குறிப்பாக மக்களோடு அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதம் பற்றி அழுத்திக் கூறப்படும். உதாரணமாக கொரில்லாக்கள் பசியுடன் ஒரு கமத்தை அடையும் போது அவர்கள் மக்களின் சம்மதத்துடன் தான் அங்குள்ள உணவை எடுத்து உண்ண வேண்டும். அத்துடன் மக்கள் பசியாக உணவற்றிருக்கும் போது வீரர்கள் உணவு வைத்திருந்தால் அவர்கள் அதனை பங்கிட்டு உண்ண வேண்டும். மக்கள் நோயிற்றிருப்பின் தம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும்.

அரசியல் ஆணையாளர்கள் மக்கள் இந்தோனேசியப் படைகள் தொடர்பாக எவ்வாறு நடக்க வேண்டும் என்பதைக் கற்பிக்க வேண்டியது முக்கியமானதாகும் ஆக்கிரமிக்கும் படைகள் பெருமளவில் திமோர் மக்களிற்கு துன்பம் விளைவித்தபடியால் மக்களோ, படையினரோ இந்தோனேசியப் படையினர் தொடர்பாகச் சரியான முறையில் நடக்கவில்லை. ஆரம்பத்தில் மக்கள் கைது செய்யப்பட்ட எதிர்ப்படையினரைக் கொன்றார்கள்

பிரெற்றிலின் மத்திய குழுவின் கருத்து யாதெனில் கைது செய்யப்படும் இந்தோனிசியப் போர்வீரர்களிற்கு காலனித்துவ ஆக்கிரமிப்பின் அநீதியை எடுத்துரைப்பதோடு அவர்கள் தங்கள் துப்பாக்கிகளை தங்கள் சகோதர சகோதரிகளான கிழக்குத் திமோர் மக்களிற்கு எதிராகவல்ல, மாறாக இந்தோநேசிய மக்களையும் சுரண்டும் சுகாட்டோ கும்பலிற்கு எதிராகவே திருப்பவேண்டும் என எடுத்துச் சொல்ல வேண்டும்

எனவே, எமது அரசியல் ஆணையாளர்கள் எமது மக்களிற்கும் தரைப் படையினருக்கும் எதிர் போர் வீரர்களோடு கூட புரட்சிகர போர் வீரர்களாக நடக்க வேண்டும் எனக் கற்பிக்கின்றார்கள்;

கேள்வி: அண்மைக் காலங்களில் எவ்வாறு நிலமைகள் விருத்தியடைகின்றன என அவதானிக்கின்றீர்கள்?

பதில்; தற்போதய மழைக்காலங்களில் நிலமைகள் பிறெற்றிலினினுக்குச் சாதகமாகவே இருக்கின்றன எதிரிகள் டாங்கிகளிலும் கவச மோட்டார் வாகனங்களிலும் தங்கியிருத்தலால் வீதிகளில் செல்வதும், நீர் நிரம்பிய ஆறுகளைக் கடத்தலும் கடினமாக இருப்பதால் இவர்கள் நகருவதற்கு கடினமாக இருக்கின்றது. ஆகவே, பிரெற்றிலின் தாக்குதலை மேற்கொள்ளுவதற்கு ஏற்றதாக இருக்கின்றது மழை காலத்திற் கூட எமது பாலத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளவும் காயமுற்றோரை சுகப்படுத்தவும் பயிர்களை கண்காணிக்கவும் முடிகிறது. வரப்போகும் மாதங்களில் பிரெற்றிலின் தான் இந்தோனேசியருக்கு இழந்த கிராமங்களைத் திரும்பிப் பெற முடிய வேண்டும் என நான் விரும்புகிறேன் வரண்ட காலத்தில் நாம் பல கிராமங்களைத் திரும்பவும் பெற முடிந்ததால் இதுவும் முடியும் என்பது திண்ணமே எதிரியிடமிருந்து நாம் ஒரு பெரிய தாக்குதலை எதிர்பார்த்திருந்த பொழுதிலும் இறுதியில் நாம் தான் அதை நடாத்தினோம். இது பல இந்தோனேசியப் படை வீரர்களைப் பலவீனப்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் குதிரையில் அல்லது நடந்து செல்வதால் நாம் தாக்குதலை ஈரலிப்புக் காலத்திலும் நடத்த ஏற்ற நிலையிலுள்ளோம் பல வாரங்கள் தொடர்ந்து மழை பெய்தால் எதிரிகளிற்கு இடஞ்சலாக இருக்கின்றது. ஆனால் நாம் இதற்குப் பழக்கப்பட்டுள்ளோம்.

கேள்வி; விடுதலை செய்யப்பட்ட பகுதிகளில் தற்போது ஒரு வைத்தியருமில்லை. அவுஸ்திரேலியர் பலர் எவ்வாறு நீங்கள் உயிர்பிழைக்கிறீர்கள் என ஆச்சரியப்படுகின்றனர். உங்கள் சுகாதார நிலமை எவ்வாறு உள்ளது?

பதில்: உண்மையாக விடுதலை செய்யப்பட்ட பகுதியில் ஒரு இந்திய வைத்தியர் இருக்கக்கூடும். ஆனால் அவரும் உயிருடன் வாழ்கிறாரா என்று என்னால் கூறமுடியாது.

ஆனால் அங்கு பல பயிற்சி பெற்றவர்களும் நீண்ட அநுபவத்தைக் கொண்ட தாதிகள் மிகவும் கடினமாக வேலைசெய்து போராட்டத்தில் தமது உதவியை அளித்து வருகிறார்கள். இந்த யுத்தத்தின் பின்னர் தீர்வு காண வேண்டிய பல பிரச்சினைகள் எமக்கு உண்டு. இவற்றில் பலவற்றைத் தீர்ப்பதற்கு எமது தாதிகள் முன்வருகிறார்கள்.

நாம் பாரம்பரிய மருத்துவ முறையை பின்பற்றுகிறோம். நன்றாக அபிவிருத்தியடைந்த பாரம்பரிய மருத்துவ முறை கிழக்குத் தீமோரில் காணப்படுகின்றது முன்னைய வழக்கப்படி எல்லாப் பாரம்பரிய மருத்துவ அறிவும் பாரம்பரிய மருத்துவரிடம் இருந்து அவருடைய சிரேஷ்ட புத்திரனுக்கு அளிக்கப்பட்டது. பாரம்பரிய முறை அமைப்பிலும் கிராமங்களிலும் இவருக்கு முக்கிய இடம் கொக்கப்பட்டிருந்தது தம் அறிவை எல்லா மக்களுடனும் பகிர்ந்து கொள்ளும் படி பாரம்பரிய வைத்தியர்களை பிரெற்றிலின் தூண்டி வருகிறது. அவர்களில் சிலர் பழமைவாதிகளாகவும் மாறுதலை எதிர்ப்பவகளாகவும் உள்ளனர். ஆனால் பலர் பிரெற்றிலின் மத்திய குழுவின் கோரிக்கைக்கிணங்க எல்லா மக்களுக்கும் பாரம்பரிய மருத்துவத்தைக் கற்பிக்கிறார்கள்.

பலநூறு வருடங்களாக மலேரியா மற்றும் எலும்பு முறிவுகள் போன்றவற்றைக் குணப்படுத்த மருந்துச் செடிகளின் வேர்களிலிருந்து செய்யப்பட்ட பாரம்பரிய மருந்துகள் உயோகிக்கப்பட்டு வருகின்றன. பலவிதமான மருந்துகள் உண்டு. காயப்பட்ட போர் வீரருக்கு சத்திர சிகிச்சைக்கு வேண்டிய மயக்க மருந்தாக ஒருவகைப் பாரம்பரிய மருந்து வெற்றிகரமாக உபயோகப்படுத்தப்படுகிறது சீனாவில் பாரம்பரிய மருத்துவத்தில் பாவிக்கப்படும் மருந்துச் செடிகள் கிழக்குத் தீமோரில் உள்ளவற்றை ஒத்தவையே.

போர்த்துக்கேய காலனித்துவத்தின் கீழ் கிழக்குத் தீமோரில் போதியளவு வைத்தியர்களும் தாதிகளும் இருக்கவில்லை நோய்களைத் தீர்ப்பதற்கு மக்கள் பாரம்பரிய மருத்துவத்தையே கையாண்டார்கள் எனவே இந்த மருத்துவ அறிவு நிலைத்துவிட்டது.

கேள்வி: யுத்த நிலமைகளுக்கிடையேயும் கல்வியறிவின்மையை நீக்கும் இயக்கம் நடைபெற்று வருகிறதா?

பதில்: ஆம் இவ்வியக்கம் கடந்த வருடம் தீவிரமாகச் செயற்பட்டது. இராணுவரீதியிற்கூட மக்கள் எழுதவும் வாசிக்கவும் தெரிந்திருப்பது அவசியம் பிரெற்றிலினின் கொள்கையை விளங்கிக் கொள்ளவும் விளங்கப்படுத்தவும் கூடியதாயிருத்தல் மிக அவசியம் எல்லாவயதினரையும் உள்ளடக்கி ஏறக்குறைய 50 000 பேர் இப்பொழுது படித்து வருகிறார்கள். 'பலின்ரில்' இன் உள்ளும் கல்வியறிவூட்டும் இவ்வியக்கம் நடைபெற்று வருகிறது பிரெற்றிலின் அரசியற் பிரிவு கல்வியறிவூட்டும் இவ்வியக்கத்திற்கு பொறுப்பாயுள்ளது. எல்லா இடமும் மக்களை ஒன்று திரட்டி கல்வியறிவூட்டப்படுகிறது. இது வெறுமனே கல்வியறிவூட்டப்படுவது மட்டுமல்ல, இந்தோனேசிய ஆக்கிரமிப்பு பற்றிய அரசியற் கல்வியுமாகும். ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் பலர் ஆக்கிரமிப்பிலிருந்து தப்பி தற்பொழுது பிரெற்றிலினூடாக அரசியற் கல்வியைப் புகட்டுகிறார்கள்.

நமது பாரம்பரிய கலாச்சாரத்திற்கு நாம் உயிர்ப்பூட்டுகிறோம். ஏகாதிபத்தியவாதிகள் காட்டிய படி அன்றி எமது எமது சொந்த முறையில் சிந்தனை செய்ய முனைகிறோம்.

(நன்றி: Australian Left Review)

# ஹொங்கொங்கில் கடலில் வாழும் 7000 மக்கள்

இப்பொழுதும் பிரித்தானியாவின் காலனித்துவ நாடாக உள்ள கொங்கொங்இல் 7000 மக்கள் இருக்க இடமில்லாததால் கடலில் ஒடங்களில் (Boat) வாழ்க்கை நடத்துகிறார்கள். 10 பிள்ளைகள் கொண்ட ஒரு குடும்பம் 100 சதுர அடியை பரப்பாகக் கொண்ட ஒடங்களில் சமயலறை, படுக்குமிடம், மலசலகூடம் முதலிய அனைத்தையும் உள்ளடக்கி வாழ்ந்து வருகின்றது. கடுங்காற்று வீசும் போது வருடாவருடம் பலகுழந்தைகள் கடலிற்குள்ளே அமிழ்ந்தி இறப்பதுண்டு. புயற்காற்று வீசும்போது ஒன்றோடொன்று மோதி விளைவிக்கப்படும் சேதங்கள் அநுபவித்தவர் மட்டுமே அறிவர்.

நீண்டகாலமாக கொங்கொங் கவர்னரிடம் இம் மக்கள் நிலத்தில் தமக்கு இருப்பிடவசதி செய்து தரும்படி விண்ணப்பித்து வருகிறார்கள். கவர்னரோ இவ்வடிப்படை மனிதாபிமான பிரச்சினையை கவனியாது காலம் கடத்துகிறார். ஒடங்களில் வாழும் இம்மக்கள் அமைதியான முறையில் நிலத்தில் தங்களை குடியேற்றும்படி போராடி வருகிறார்கள். இவ்வருடம் ஜனவரி 7ம் திகதி இம்மக்களில் 76 பேர் கவர்னரிடம் முறையிடச் சென்றார்கள். செல்லும் வழியில் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிசாரினால் தடை செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டார்

[தொடர்ச்சி 11-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தில் அதிகரி.........

சிறீலங்காவிலுள்ள சிறி விக்கிரம ராசசிங்கன் என அழைக்கப்பட்ட கண்ணுச் சாமியின் கண்டி அரசு 15ம் 18ம், ஆண்டு வரையும் இருந்து வந்தன என்பது வரலாற்று உண்மைகளாகும்.

கடைசியாக இலங்கைத் தீவை ஆண்ட ஆங்கில அரசினர் தமிழ் ஈழத்தையும் சிறீலங்காவையும் தமது நிர்வாக வசதிக்காக ஒன்றிணைத்துப் பின்பு 1948-ம் ஆண்டு தாம் ஒன்றிணைத்த இலங்கைத்தீவுக்குச் சுதந்திரத்தைக் கொடுத்து ஒன்றிணைந்த நிலையிலேயே இத்தீவை விட்டு அகன்றனர். இதனால் கால கதியில் தமிழ் ஈழம் தனது அயல் நாடான சிறீலங்காவின் பிடியில் அகப்பட்டது;

தமிழ் ஈழம் 16-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து 20-ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை ஐரோப்பிய நாடுகளாலும், பின்பு 1948ம் ஆண்டிலிருந்து சிறீலங்காவாலும் ஆக்ரமிக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு சுரண்டப்பட்டு வருகின்றது. 1950ம் ஆண்டிற்குப் பின்பு தமிழ் ஈழத்தின் மீதான சுரண்டல் வலுவடைந்து வருகின்றது. காலத்திற்குக் காலம் சிறீலங்காவில் ஏற்படும் அரச மாற்றங்களால் தமிழ் ஈழத்தின் மீதான சிறீலங்காவின் ஒடுக்குதல் வேகமும் அதிகரித்து வந்தன. தமிழ் ஈழம் சிறீலங்காவினால் ஆக்கிரமிக்கப்பட்டு உள்ளதனால் ஏற்பட்ட விளைவுகளில் வெளி நிலையில் முக்கிய மான ஒன்றான அடக்கு முறையைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்;

தமிழ் ஈழத்தில் சிறீலங்காவின் அடக்கு முறைகள் இரண்டு வழிகளில் நடை பெறுகின்றன.

(1) சிறீலங்காவின் முப்படைகளும் காவல் துறையும் (பொலிசும்)

(2) சிறீலங்கா தமிழ் ஈழத்தைச் சுரண்டுவதால் ஏற்பட்ட நில அபகரிப்பும், சிங்கள குடியேற்றமும் அதன் விளைவான சிங்கள காடையரின் தாக்குதலும்.

சிறீலங்கா தமிழ் ஈழத்தின் மீதான சுரண்டலை பாதுகாக்கவும், அதிகரிக்கவும் தனது பிடியின் கீழ்த் தமிழீழத்தை நிர்வகிக்கவும் தமிழ் ஈழத்தை அழித்துக் கால கதியில் அதனை சிறீலங்காவில் சங்கமிக்கச் செய்கின்ற பேரினவாதக் கொள்கையை நிறைவேற்றவும் தமிழ் ஈழத்தில் தலது அரசு நிர்வாக இயந்திரங்களிலொன்றான முப்படைகளையும், காவல்துறையையும் நிறுவி, நிலைப்படுத்தி வருகின்றது இவ்வாறு தமிழீழத்தில் சிறீலஙகாவினால் நிறுவப்பட்ட முப்படைகளினாலும் பொலிசாரினாலும் தமிழ் மக்கள் காலத்திற்குக் காலம் தாக்கப்பட்டு வதைக்கப்பட்டு அதிக அடக்கு முறைக்கும் அட்டூழியத்திற்கும் உள்ளாகி வருகின்றனர், குறிப்பாக சிறீலங்காவின் முதலாளித்துவ அரசுகள் எமது நாட்டின் மீதான அடக்கு முறையை இராணுவத்தின் மூலமும், பொலிசின் மூலமும் நடத்தி வருகின்றன. தமிழ் ஈழம் சிறீலங்காவிடம் 1948ம் ஆண்டு வசமானாலும் 1965ம் ஆண்டிலிருந்து தமிழ் ஈழத்தில் நடந்த படைகளின் தாக்குதலைப் பார்ப்போம்.

★ 1965ம் ஆண்டு பங்குனியில் பேசாலை நடுக்குடாவில் மீனவர்கள் பலமாகத் தாக்கப்பட்டமை

★ 1966ம் ஆண்டு ஆனி மாதத்தில் குடாரப்பு என்ற கரையோர மீன்பிடி கிராமத்தில் பெண்களை இராணுவத்தினர் கற்பழிக்க முயற்சித்தமை.

★ 1967 சித்திரை 7ல் முன்னைய R. V. G. பீடி கம்பனியைச் சேர்ந்த சிவஞான சுந்தரம் என்பவர் அக்கிரமாக இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டமையும் வல்வை மக்கள் தாக்கப்பட்டமையும், இத்தாக்குதலின்போது இப்போதைய பருத்தித்துறை பா. உ. வான திரு, துரைரத்தினம் இராணுவத்தினரால் தாக்கப்பட்டார்.

★ 1968 இல் குருநகர் சந்தியோகுமையோர் தேவாலயத்தில் (மார்கழி 24) கிறிஸ்மஸ் விழாவின் போது பொலிசார் மக்களைத்தாக்கியமையும், வீணை போன்ற ஆலய தளபாடங்கள் சேதப்படுதியமையும்.

★ 1971 இல் தாழ்வுப்பாடு என்னும் மன்னார்ப் பகுதியில் அமைந்துள்ள கிராமத்தில் இராணுவத்தினர் வீடுகளைக் கொழுத்தி முற்றுகையிட முயற்சித்தமை

★ 1972ம் ஆண்டின் பின்பு சிறீலங்காவின் ஒடுக்குதல் வேகமும் அதிகரித்ததால் அடக்கு முறையின் வேகமும அதிகரித்தது.

★ 1973 ஐப்பசியில் புனித சம்பத்தரியார் கல்லூர் விளையாட்டு மைதானத்தில் நடந்த உதை பந்தாட்டத்தில் இராணுவத்தினருக்கும் சில குருநகர் பொது மக்களுக்கும் நடந்த தகராறைச் சாட்டாக வைத்துக் கொண்டு சேந்தாங்குளச் சந்தியில் சங்கானை சங்கரத்தைக் கார் தீயிடப்பட்டதுடன் (A. 40) சேந்தாங் குளத்திலிருந்து வல்லை வரையிலான கரையோரப் பாதைகளில் ஆங்காங்கே மக்களைத் தாக்கி கடைகளைக் கொள்ளையிட்டனர்.

★ 1974 தை 10 இல் தமிழ் விழாப் பயங்கரப் படுகொலைகள்,

★ 1976 பருத்தித்துறை காணிவேல் இராணுவத்தினர் மக்களைத்தாக்கியதுடன் காணி வேல் பொருட்களைச் சேதம் படுத்தியமை.

★ 1796 மாசி 2 இல் புத்தளம் பள்ளி வாசலில் இஸ்லாமிய தமிழர் ஒன்பது பேர் பொலிசாரால் சுட்டுச் கொல்லப்பட்டமை.

★ 1976 ஆவணியில் நல்லூர் வங்கி ஊழியர் பரராசாவைச் செம்மணியில் படுகொலை செய்தமை;

★ 1977 ஆவணியில் நடந்த தமிழ் ஈழத்தவர் மறக்க முடியாத பயங்கரப் படுகொலைகள், உடல் ஊறுகள் தாக்குதல்கள், தீவு முழுவதும் தமிழருக்கு எதிரான ஒடுக்குதல்கள் இவ் ஒடுக்குதலில் குறிப்பிடக் கூடியதாக தமிழ் ஈழத்தின் தலைநகர்களில் ஒன்றான யாழ் நகரம் பொலிசாரால் எரியூட்டப்பட்டது.

[தொடர்ச்சி மறுபக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள் :

4-ம் பக்கத் தொடர்ச்சி (Continued from page 4)

T: We're also human needing jobs to earn our food — S: We shall not be moved
T: We need good roads & bridges — S: ,, ,,
T: Schools and health facilities — S: ,, ,,
T: You've got to give us better government services — S: ,, ,,

**Repeat Refrain**

T: Appoint our men as officials to serve us in our areas — S: ,, ,,
T: We have our own geographical identity — S: ,, ,,

**Repeat Refrain:** Reverse position

S: Tamils' a national language — T: too little and too late
S: Standadization abolished — T: ,, ,,
S: We have provided you with lots of compromise — T: that isn't quite enough
S: We've taken care of refugees — T: what? in our own land?
S: Proportionatelv now we know we've done a lot — T: That isn't quite enough!

**Tamils Only**

We are in a struggle for full humanity
We will fight together towards victory!
We will continue fighting for our human rights
we shall not be moved.
We will fight till victory we shall not be moved
You've given us no alternative but fights with arms
We shall fight with arms!
We shall fight like Tigers!

5-ம் பக்கத் தொடர்ச்சி :

தமிழர் [தனியே]

— நாங்க்ள் முழு மனிதத்துவத்திற்குமான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்!
— நாங்கள் ஒன்றுக வெற்றிவரை போராடுவோம்!
— நாங்கள் எமது போராட்டத்தைத் தொடர்ந்து செய்வோம்!
— நாங்கள் அசைந்து கொடுக்கமாட்டோம்!
ஆயுதம் கொண்டு போராடுவதைத் தவிர வேறு மாற்று வழிகளை நீங்கள் எங்களிற்குத் தரவில்லை
— நாம் ஆயுதம் கொண்டு போராடுவோம்!
— நாங்கள் புலிகளைப்போல் போராடுவோம்!

9-ம் பக்கத் தொடர்ச்சி :

கள். 'சட்டத்திற்கு முரணனமுறையில் ஒன்று கூடினர்கள் 'Unlawful Assembly' என இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இவர்களை விடுவிக்கவும் 7000 மக்களையும் உடனடியாக நீரிலிருந்து நிலத்தில் குடியேற்றவும் கோரிக் கடிதங்கள் எழுதும்படி எம்மை ஹொங்கொங்கிலுள்ள பல்கலைக்கழக மாணவர்சள் தொழிற்சங்கவாதிகள் கேட்டிருந்தாகள். நாம் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் பொது மக்கள் ஆகியோரிடம் கையொப்பமிட்ட கடிதத்தினை ஹொங்கொங் கவனரிற்கு அனுப்பி வைத்துள்ளோம். இதன் பிரதி வள்ளங்களிலும் வாழும் 7000 மக்கள் பிரதிநிதிகளிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

12-ம் பக்கத் தொடர்ச்சி :

மக்சளையும், இந்தோநேசிய மக்களையும் சுரண்டிக் கொடுமைப் படுத்தி வாழும் 'சுகாட்டோ' கும்பலுக்கெதிராகவே போர் புரிய வேண்டுமென அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்திற்காக அர்ப்பணித்திருக்கும் நாமும் எளிய வாழ்க்கை, மக்களை நேசிக்கும் மாண்பு, கிராமங்களின் உண்மை மதிப்பைக் கண்டுணருதல், ஆழமான அரசியல் அறிவைப் பெற்றுக் கொள்ளல் என்பவற்றினூடாக எமது மக்களை ஒரு விடுதலைப் போராட்டத்திற்குத் தயார் செய்வோமாக.

அன்புச் சகோதரன்
வீரமணி

10-ம் பக்கத் தொடர்ச்சி :

★ 1978 ஆனி 27ம் திகதி மாங்குளம் சுந்தரலிங்கம் இராணுவத்தினரால் புகையிரதத்தில் பயணம் செய்யும் போது சுட்டுக் கொல்லப்பட்டமை.

★ 1978 மார்கழி 16ம் திகதி தொடக்கமும் 18ம் திகதி வரையிலான வல்வை, வசாவிளான், யாழ், சிலாபத்துறை, முருங்கன், மட்டு நகர் ஒட்டமாவடி, தாக்குதல்களும் மீண்டும் இவ்வாண்டு தையில் ஆரம்பித்துள்ள மயிலிட்டி, கச்சேரி(யாழ்) வாழைச்சேனை இராணுவ பொலிசார் தாக்குதல்கள் போன்றவைகள் ஆகும்.

( தொடர்ச்சி மறு இதழில் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம்

# கிழக்குத் தீமோரும் தமிழ் ஈழமும்

அன்புச் சகோதரனே, சகோதரியே

பங்களாதேஷின் இன்றைய நிலைமை பற்றி ஜனவரி மாத இதழில் உனக்குக் கூறியிருந்தேன். இவ் இதழில் இந்தோனேசியா ஏகாதிபத்தியத்தின் கீழ் காலனித்துவ நாடாக உள்ள கிழக்குத் தீமோர் நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றி எழுதியுள்ள பக்கங்களை படித்திருப்பாய் என்று நம்புகின்றேன்.

கிழக்குத் தீமோர் மக்கள் அவர்களுக்கே உரித்தான பிரத்தியேக சூழ் நிலைகளில் எவ்வாறு போராடித் தம் தாய் நாட்டைப் படிப்படியாக மீட்டு வருகிறார்கள் என்பதை றெஜேறியே லொபட்டோ (Rogerio Lobato)வின் பேட்டி உனக்கு வெளியாக்கியிருக்கும். அண்மையில் மனிதன் பங்கு கொண்ட சர்வதேச மகாநாடொன்றின் இந்தோனேசியாவிலிருந்து ஐந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்களில் எவரும் கிழக்குத்தீமோர் மக்கள் பிரச்சனைகள் பற்றி எதுவிதத் தகவலும் தரவில்லை. ஆசியாவில் இந்தோனேசியா ஏகாதிபத்தியத்தினால் அடக்கப்படும் கிழக்குத் தீமோர் மக்களின் நீதியான போராட்டம் பற்றியும் அவர்களுக்கு சர்வதேச ஆதரவு அவசியமெனவும் மேற்படி மகாநாட்டில் மனிதன் குரலெழுப்பினான். இதனை இந்தோனேசியர்கள் விரும்பாமல் இருந்ததோடு கிழக்குத்தீமோர் மக்கள் பற்றி மனிதன் பெற்ற தகவல்கள் சரியல்ல என்றும் கூறினார்கள். இவ்வாறே அம் மகாநாட்டில் வெளிநாட்டறிஞர்கள் சிலர் தமிழ் ஈழ மக்கள் பற்றியும் அவர்கள் விடுதலைப் போராட்டம் பற்றியும் ஆய்ந்து சமர்ப்பித்த முற்றிலும் சரியான அறிக்கையில் உள்ள தகவல்கள் பிழையானவை என சிறீலங்காப் பேராளர்கள் (Delegates) பலரும் சினந்து கூறினார்கள்.

ஸ்ரீலங்கா ஏகாதிபத்தியத்தினால் தமிழ்த் தேசிய இனம் ஒடுக்கப்பட்டு வருவதனால் கிழக்குத்தீமோர் மக்களோடு எங்களையும் ஒன்று படுத்தி எவ்வாறு அவர்களது வீர விடுதலை போராட்டங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியுமென நாம் சிந்திப்போம்.

கிழக்குத் தீமோர் மக்கள் தமது விடுதலை இயக்கமான பிரெற்றிலின் (Fretilin) இற்குக் கட்டுப்பட்டு எளிமையான வாழ்க்கை வாழ்கிறார்கள். சுதேச உணவை உண்கிறார்கள்; காடுகளிலும்; மலைகளிலும் கூடக் கமம் செய்கிறார்கள். கிராமங்களில் உண்மை மதிப்பை உணர்ந்து கிராமங்களை நேசித்து கிராமங்களையே விடுதலைத் தளங்களாக அமைக்கிறார்கள். தங்கள் நோய்களிற்கு பாரம்பரிய இயற்கை மருத்துவத்தைப் பயன்படுத்துகிறார்கள். கிராம வைத்தியர்களும் பிரெற்றிலினின் வேண்டுகோளுக்கிணங்க தங்கள் மருத்துவ இரகசியங்களை மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இயற்கையாகத் தீமோரில் காணப்படும் மருந்துச் செடிகளைக் கொண்டே பெருநோய்களுக்கெல்லாம் வைத்தியம் செய்கிறார்கள். தாயக விடுதலைப் போராட்டத்தில் மக்கள் ஒவ்வொருவருமே பங்குபற்றுகிறார்கள். மக்கள் பாரம்பரிய ஆயுதங்களான விற்கள், வெடிகுழாய்கள், பொறிகள் முதலியவற்றை உபயோகித்தே போராடுகிறார்கள். கிழக்குத் தீமோர் போராட்டம் ஒரு மக்கள் போராட்டமாக இருப்பதனாலேயே அது நின்று நிலைத்து இன்று வெற்றியை அடிகோலிக் கொண்டிருக்கிறது.

எதிரியைத் தாக்கும் முறையிலும் எதிரியின் [illegible] பலத்தை ஆய்வு செய்யும் முறையிலும் சிறந்த யுத்த தந்திரத்தைத் தீமோர் மக்கள் கையாளுகிறார்கள். சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருந்து போராடுகிறார்கள் கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் முறையாகப் பயன்படுத்துகிறார்கள் போர்வீரர்களே போராட்டங்களில் ஈடுபடும் அதே வேளையில் தமக்குத் தேவையான உணவையும் தயாரித்துக்கொள்ளுகிறார்கள். போர்வீரர் தாம் போர் செய்கின்ற காரணத்தால் ஏனைய தீமோர் மக்களை விடத் தம்மை உயர்வாகக் கருதுவதில்லை. அவர்கள் பசியாயிருக்கும் நேரங்களிலும் மக்கள் பசியையும் போக்கி அவர்கள் பிரச்சினைகளைத் தீர்த்த பிற்பாடே தாம் பசி ஆறுவார்கள். எதிரியை அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பலமிழக்கச் செய்வதே 'பிரெற்றிலினின் நோக்கமாகும்.

ஒன்று திரட்டப்பட்ட மக்கள் சக்தியின்முன் கவசமோட்டார் வண்டிகளோ, பீரங்கிகளோ, ஜெட்போர் விமானங்களோ, யுத்தக்கப்பல்களோ ஒன்றும் செய்ய முடியாது என்பதற்கு தீமோர் மக்களின் விடுதலைப் போராட்டம் ஒரு நல்ல உதாரணமாகும். போராட்டத்தின் போதும் போராட்டத்திற்கு முன்னும் மக்களுக்கு அரசியற் கல்வியையும் அதன் வழியாகச் சமுதாயச் சிந்தனையையும் பிரெற்றிலின் வழங்கி வந்தது குறிப்பிடத்தக்கது அம்சமாகும். உணர்ச்சி வசப்பட்டு அவர்கள் எந்த முடிவையும் எடுக்கவில்லை எதிரிப்போர் வீரர்கள் மட்டில் கூட அவர்கள் ஒரு புரட்சிகரப் பார்வையைக் கொண்டிருந்தார்கள். ஆரம்பத்தில் தீமோர் மக்கள் கைதிகளாக்கப்பட்ட இந்தோனேசியப் போர் வீரர்களைக் கொலை செய்து வந்தாலும் நாளடைவில் பிரெற்றிலின் மத்திய குழுவின் வேண்டுகோளுக்கிணங்க எதிரிகளுக்குக்கூட அரசியல் அறிவு புகட்டப்பட்டது. இந்தோனேசியப் போர் வீரர்கள் தங்கள் சகோதர சகோதரிகளான கிழக்குத் தீமோர் மக்களுக்கெதிராகப் போர் தொடுப்பதை விட்டு கிழக்குத் தீமோர்

[தொடர்ச்சி 11-ம் பக்கம்]

இப்பிரசுரம் பண்டத்தரிப்பு பிரதான வீதியிலுள்ள திரு அ. விமலதாசன் என்பவருக்காக யாழ்ப்பாணம் 102, பிரதான வீதியிலுள்ள செல். பிலோமினு அச்சகத்தில் அச்சிட்டு 20 3 79-ல் வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the G. P. O. Under no Q. B. 8935,78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org